

பெரம்பலூர் மாவட்டம்,குன்னம் சட்டமன்ற தொகுதியில் வெற்றி பெற்ற போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தேர்தல் அலுவலர் சக்திவேலிடம் வெற்றி பெற்றதற்கான சான்றிதழ் பெற்றார். அப்போது மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன், மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளர் இரா.ப.பரமேஷ்குமார் மற்றும் கழக நிர்வாகிகள் ஆகியோர் உடனிருந்தனர்.



தஞ்சாவூர் மாவட்டம் திருவையாறு சட்டமன்றத் தொகுதியின் கழக வேட்பாளர் துரை.சந்திரசேகரன் வெற்றி பெற்றதற்கான சான்றிதழை தேர்தல் நடத்தும் அலுவலரிடம் இருந்து பெற்றார். உடன் முன்னாள் மத்திய இணை அமைச்சர் எஸ்.எஸ்.பழநிமாணிக்கம், ச.முரசொலி எம்.பி, உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளனர்.




திருப்பூர் தெற்கு மாவட்டம், மடத்துக்குளம் சட்டமன்ற தொகுதி கழக வேட்பாளர், தெற்கு மாவட்ட அவைத் தலைவர் இரா.ஜெயராமகிருஷ்ணன் மடத்துக்குளம் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றதற்கான சான்றிதழை தேர்தல் நடத்தும் அதிகாரியிடம் பெற்றார். உடன் தெற்கு மாவட்ட கழக பொறுப்பாளர் பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஈஸ்வரசாமி உள்பட கழக நிர்வாகிகள், கூட்டணி கட்சி நிர்வாகிகள் உள்ளனர்.



மதுரை மேலூர் சட்டமன்ற தொகுதி காங்கிரஸ் வேட்பாளர் விஸ்வநாதன் வெற்றிச் சான்றிதழை தேர்தல் அலுவலர் சங்கீதாவிடம் பெற்றுக் கொண்டார்



கரூர் மாவட்டம் அரவக்குறிச்சி சட்டமன்ற தொகுதியில் கழக வெற்றி வேட்பாளர் மொஞ்சனூர் ஆர்.இளங்கோ அமோக வெற்றி பெற்றார். 18, 880 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற அவருக்கு தேர்தல் அதிகாரி வெற்றிச் சான்றிதழ் வழங்கினார். அருகில் முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜியின் சகோதரர் அசோக் குமார், ஆசி எம். தியாகராஜன் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.



நாகை மாவட்டம் நாகை சட்டமன்ற தொகுதி திமுக கூட்டணி சார்பில் உதய சூரியன் சின்னத்தில் போட்டியிட்ட நாகை சட்டமன்றத் தொகுதி வேட்பாளராக போட்டியிட்ட மனிதநேய மக்கள் கட்சித் தலைவர் பேராசிரியர் எம்.எச்.ஜவாஹிருல்லா வெற்றிப் பெற்றதையடுத்து வெற்றி சான்றிதழை தேர்தல் நடக்கும் அலுவலர் கோட்டாட்சியர் சங்கரநாராயணனிடம் பெற்றுக் தொண்டார். உடன் கழக வழக்கறிஞர் மு.தினேஷ்குமார் மற்றும் பலர் உள்ளனர்.



திருவாரூர் சட்டமன்றத் தொகுதியில் திராவிட நாயகர் தளபதி அவர்களின் நல்லாசிகளோடு வெற்றிபெற்ற பூண்டி.கே.கலைவாணன் தனது வெற்றிச்சான்றிதழை தேர்தல் நடத்தும் அதிகாரியான திருமதி. சத்யாவிடமிருந்து பெற்றுக்கொண்டார். உடன் நகர செயலாளர் வாரை.எஸ்.பிரகாஷ், ஒன்றிய செயலாளர் சேகர் கலியபெருமாள், சிபிஐ நிர்வாகி மாசிலாமணி ஆகியோர் இருந்தனர்.




மயிலாடுதுறை மாவட்டம் பூம்புகார் சட்டமன்ற தொகுதியில் கழக வேட்பாளராக போட்டியிட்ட மயிலாடுதுறை மாவட்ட கழக செயலாளர் நிவேதா எம். முருகன் வெற்றி பெற்றதையடுத்து வெற்றிச் சான்றிதழை தேர்தல் நடத்தும் அலுவலர் கீதா வழங்கினார். உடன்சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்கள் எம்.எம்.சித்திக், ஏ.சி.என்.விஜயபாலன், தகவல் தொழில் நுட்ப அணி மாநில துணைச் செயலாளர் பி.எம்.ஸ்ரீதர், மாவட்ட கழக துணை செயலாளர் மு.ஞானவேலன், தலைமை செயற்குழு உறுப்பினர் ஜி.என்.ரவி, பொதுக்குழு உறுப்பினர் ஜெ.கபிலன், மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் வெடி எஸ்.பாலமுருகன் மற்றும் பலர் உள்ளனர்



கரூர் மாவட்டம் குளித்தலை சட்டமன்ற தொகுதியில் கழக வேட்பாளர் சூரியனூர் சந்திரன் வெற்றி பெற்றார். அவருக்கு வெற்றி சான்றிதழை தேர்தல் அதிகாரி வழங்கினார். அருகில் அரவக்குறிச்சி தொகுதி கழக சட்டமன்ற உறுப்பினர் மொஞ்சனூர் ஆர். இளங்கோ, முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜியின் சகோதரர் அசோக் குமார் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.



திருப்பூர் தெற்கு மாவட்டம், உடுமலைப்பேட்டை சட்டமன்ற தொகுதி கழக வேட்பாளர், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் மு.ஜெயக்குமார் வெற்றி பெற்றதற்கான சான்றிதழை தேர்தல் நடத்தும் அலுவலரிடம் இருந்து பெற்றார். உடன் தெற்கு மாவட்ட கழக பொறுப்பாளர் பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஈஸ்வரசாமி, கழக இளைஞர் அணி துணைச் செயலாளர் இன்பா ரகு, குடிமங்கலம் மேற்கு ஒன்றிய கழக செயலாளர் அடி வள்ளி எம்.எஸ்.முரளி, உடுமலைப்பேட்டை நகர கழக துணைச் செயலாளர் எஸ்.செந்தில்குமார் உள்பட கழக நிர்வாகிகள், கூட்டணி கட்சி நிர்வாகிகள் உள்ளனர்.